| O.S.No. 438/2023 | PW1 : திரு.முனுசாமி<br>த/பெ. திரு. கிருஷ்ண கவுண்டர் | 02-07-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. மொத்தம் எத்தனை விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் 20 சென்ட்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் சர்வே எண். 101/19B ஆகும். வழக்கு சொத்தினை எமநாதன் என்பவரிடமிருந்து கிடையம் வாங்கினேன். தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பாக வில்லங்கம் மற்றும் மூல ஆவணத்தை பார்த்தீர்களா என்றால் இல்லை, தாவா சொத்து எமநாதனுடையது என்றும், அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளது என்று அவர் சொன்னதன் அடிப்படையில் நான் கிரையம் வாங்கினேன்.

2. தாவா சொத்து எமநாதனுக்கு எவ்வாறு பாத்தியமானது என்று தெரியுமா என்றால் அவர் ராகவநாயுடுவிடமிருந்து கிரையம் வாங்கினார். ராகவநாயுடுவிடமிருந்து எமநாதன் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ராகவநாயுடுவிடமிருந்து எமநாதன் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தை மற்றவரிடம் கொடுத்து படித்து பார்த்தேன். அந்த கிரையம் ஆவணம் வா.சா.ஆ−1 ஆகும்.

3. வா.சா.ஆ.1−ல் சர்வே எண். 101/19−ல் எமநாதன் 15 சென்ட்டினை கிரையம் பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 101/19−ல் மேற்படி 15 சென்ட்டை தவிர எமநாதனுக்கு வேறு எதுவும் இடம் இல்லை என்றால் சரிதான். எமநாதன் எவ்வளவு சொத்தை கிரையம் வாங்கினாரோ அந்த விஸ்தீரனத்தை மட்டும்தான் எனக்கு கிரையம் கொடுக்க முடியும் என்றால் சரிதான். அதனால், எமநாதன் மேற்படி சர்வே

எண்ணில் 15 செண்ட்டினை கிரையம் வாங்கிவிட்டு 20 செண்ட்டினை எனக்கு கிரையம் கொடுத்திருந்தால் அது தவறு என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2–ன்படி சர்வே எண். 101/19B – ல் எமநாதனிடம் 20 செண்ட் மட்டும் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 20 செண்ட்டிற்காகத்தான் தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4. ஏழுமலை என் சகோதரர். என் சகோதரர் ஏழுமலை பிரதிவாதிகளுக்கு எதிராக செய்யாறு உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான், ஆனால் அது வேறு சர்வே எண் ஆகும். நானும், எனது சகோதரர் ஏழுமலையும் சென்னையில்தான் வசித்து வருகிறோம். செய்யாறு உரிமையியல் நீதிமன்றத்தில் என் சகோதரர் ஏழுமலை நான் அனுமதி அளித்ததன் அடிப்படையில் வீடு கட்டி குறியிருந்து வருவதாகவும், என் அனுமதியின்பேரில் அந்த வழக்கினை தொடர்வதாகவும் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அந்த வழக்கிற்கும் இந்த தாவா சர்வே எண்ணுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

5. ஏழுமலை தாக்கல் செய்த வழக்கை நான் இதுவரையில் படித்து பார்க்கவில்லை, அந்த வழக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்று வழக்கறிஞரிடம் கேட்டு படித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை, இதுநாள்வரையில் அவர்கள் என்ன பதில் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. ஏழுமலை தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கின் நகலினை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

6. எமநாதனுக்கு ஏழுமலை, கோபால் என 2 மகன்கள் மற்றும் 4 மகள்கள் வாரிசுகள் ஆவார்கள். எமநாதனும் அவரது இரண்டு மகன்களும் சொத்துக்கள் குறித்து அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே எமநாதனும் அவரது இரண்டு மகன்களான 1, 2 பிரதிவாதிகளும் பாகப்பிரிவினை செய்துகொண்டததில் தாவா சர்வே எண்ணில் 15 சென்ட்டானது 1, 2 பிரதிவாதிகளின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எமநாதன் பாகப்பிரிவினை செய்துகொண்டது எனக்கு தெரியாது. எதிர்காலத்தில் என்ன பிரச்சனை எழுந்தாலும் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று அவர் சொன்னதால் நான் அவரிடம் கிரையம் வாங்கினேன். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை வாங்கி பார்த்தீர்களா என்றால் இல்லை.

7. தாவா சர்வே எண்ணில் 15 சென்ட் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டதால் அந்த சொத்தினை விற்பனை செய்ய எமநாதனுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எமநாதன் கிரையம் கொடுத்த வா.சா.ஆ.2 கிரைய் பத்திரத்தில் 1, 2 பிரதிவாதிகள் கையெழுத்து போடவில்லை. அதனால், நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றாலும், அது 1, 2 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. எமநாதன் செல்லன் மற்றும் சக்கரகவுண்டரிடம் வாங்கிய கடனை பைசல் செய்ய முடியவில்லை என்பதாலும், அவர்களது மகன்கள் அவருக்கு சோறு

போடவில்லை என்பதாலும், தாவா சொத்தினை கடன்களுக்காக விற்பனை செய்வதாக சொல்லி என்னிடம் விற்பனை செய்தார். நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்திலும் செல்லன், சக்கரைகவுண்டரிடம் வாங்கிய கடனை பைசல் செய்வதற்காக சொத்தினை விற்பனை செய்வதாக வாசகம் எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது. எமநாதனுக்கு எவ்வித கடனும் இல்லை என்றாலும், அவர் கடனை பைசல் செய்வதற்காக இச்சொத்தினை விற்பனை செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. வழக்கு சொத்துக்கான பட்டா எமநாதன் மற்றும் எனது பெயரில் கூட்டாக உள்ளது. ஏற்கனவே எனது சகோதரர் ஏழுமலை தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் அதனை மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கும் அந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும், அந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துதான் இந்த வழக்கிலும் சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

9. ஏற்கனவே ஏழுமலை தாக்கல் செய்த வழக்கு சொத்தின் சர்வே எண் வேறு என்றும், இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் வேறு என்றும் எனது வழக்கறிஞர் படித்து சொன்னதன்பேரில் எனக்கு தெரியும். ஏற்கனவே எனது தம்பி தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், தள்ளுபடிக்குரியது

என்றாலும் சரியல்ல. உரிமையில்லாத நபரிடமிருந்து தாவா சொத்தினை நான் கிரையம் வாங்கியதால் அச்சொத்தை பொருத்து நான் எந்த பரிகாரம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.07.02 17:36:50 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**